# விடாமுயற்சி ஒன்றே முழு வெற்றியைத் தரும்

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## பத்தாம் வகுப்பு

கணிதம் / MATHEMATICS

கால அளவு : 3 மணி நேரம் [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளை கொண்டது.

### பகுதி - I / PART - I

குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1 $\{(a,8),(6,b)\}$ ஆனது ஒரு சமனிச் சார்பு எனில், $a$ மற்றும் $b$ மதிப்புகளாவன முறையே

(அ) (8,6) (ஆ) (8,8) (இ) (6,8) (ஈ) (6,6)

2 ஒரு சார்பின் வீச்சகம் ஒருறுப்புக் கணமானால், அது ஒரு

(அ) பலவற்றிலிருந்து ஒன்றுக்கான சார்பு (ஆ) சமனிச் சார்பு
(இ) ஒன்றுக்கொன்றான சார்பு (ஈ) உட்சார்பு

3 யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தின் படி, $a$ மற்றும் $b$ என்ற மிகை முழுக்களுக்கு, தனித்த மிகை முழுக்கள் $q$ மற்றும் $r, a = bq + r$ என்றவாறு அமையுமானால், இங்கு $r$ ஆனது,

(அ) $1 < r < b$ (ஆ) $0 < r < b$ (இ) $0 \le r < b$ (ஈ) $0 < r \le b$

4 $(1^3 + 2^3 + 3^3 + \cdots + 15^3) - (1 + 2 + 3 + \cdots + 15)$ யின் மதிப்பு

(அ) 14400 (ஆ) 14200 (இ) 14280 (ஈ) 14520

5 $\dfrac{a^3}{a-b}$ உடன் $\dfrac{b^3}{b-a}$ ஐக் கூட்ட, கிடைக்கும் புதிய கோவை

(அ) $a^2 + ab + b^2$ (ஆ) $a^2 - ab + b^2$ (இ) $a^3 + b^3$ (ஈ) $a^3 - b^3$

6 $\begin{pmatrix} 5 & x & 1 \end{pmatrix}\begin{pmatrix} 2 \\ -1 \\ 3 \end{pmatrix} = \begin{pmatrix} 20 \end{pmatrix}$ எனில், $x$-ன் மதிப்பு

(அ) 7 (ஆ) $-7$ (இ) $\dfrac{1}{7}$ (ஈ) 0

7 $(2x-1)^2 = 9$ –யின் தீர்வு

(அ) $-1$ (ஆ) 2 (இ) $-1, 2$ (ஈ) இதில் எதுவும் இல்லை

8 $O$ -வை மையமாக உடைய வட்டத்திற்கு, வெளியேயுள்ள புள்ளி $P$ -யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் $PA$ மற்றும் $PB$ ஆகும். $\angle APB = 70^\circ$ எனில், $\angle AOB$ -யின் மதிப்பு

(அ) $100^\circ$ (ஆ) $110^\circ$ (இ) $120^\circ$ (ஈ) $130^\circ$

9 $Y$ அச்சில் அமையும் புள்ளி $A$ –யின் செங்குத்துத் தொலைவு 8 மற்றும் $X$ அச்சில் அமையும் புள்ளி $B$–யின் கிடைமட்டத் தொலைவு 5 எனில், $AB$ என்ற நேர்க்கோட்டின் சமன்பாடு

(அ) $8x + 5y = 40$ (ஆ) $8x - 5y = 40$ (இ) $x = 8$ (ஈ) $y = 5$

10 $(2,\ 1)$ ஐ வெட்டுப் புள்ளியாகக் கொண்ட இரு நேர்க்கோடுகள்

(அ) $x - y - 3 = 0;\ 3x - y - 7 = 0$ (ஆ) $x + y = 3;\ 3x + y = 7$

(இ) $3x + y = 3;\ x + y = 7$ (ஈ) $x + 3y - 3 = 0;\ x - y - 7 = 0$

11 $a\cot\theta + b\ \text{cosec}\theta = p$ மற்றும் $b\cot\theta + a\ \text{cosec}\,\theta = q$ எனில் $p^2 - q^2$ –ன் மதிப்பு

(அ) $a^2 - b^2$ (ஆ) $b^2 - a^2$ (இ) $a^2 + b^2$ (ஈ) $b - a$

12 ஓர் உருளையின் ஆரம் அதன் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு எனில், அதன் மொத்தப் புறப்பரப்பு

(அ) $\frac{9\pi h^2}{8}$ ச. அ (ஆ) $24\pi h^2$ ச. அ (இ) $\frac{8\pi h^2}{9}$ ச. அ (ஈ) $\frac{56\pi h^2}{9}$ ச. அ

13 ஒரு கூம்பின் அடிப்புற ஆரம் மும்மடங்காகவும் உயரம் இரு மடங்காகவும் மாறினால் கன அளவு எத்தனை மடங்காக மாறும்?

(அ) 6 மடங்கு (ஆ) 18 மடங்கு (இ) 12 மடங்கு (ஈ) மாற்றமில்லை

14 1 -லிருந்து 25 -க்குள் ஒரு எண் தேர்ந்தெடுக்கப்படுகிறது.அது இரட்டைப் பகா எண்ணாக இருக்க நிகழ்தகவு

(அ) $\frac{1}{25}$ (ஆ) $\frac{3}{25}$ (இ) $\frac{2}{25}$ (ஈ) $\frac{4}{25}$

## பகுதி - II / PART - II

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10x2=20**

15 $R$ என்ற ஒரு உறவு $\{(x,y)\ /\ y = x+3,\ x \in \{0,1,2,3,4,5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் கண்டறிக.

16 $A = \{-2,-1,0,1,2\}$ மற்றும் $f : A \to B$ என்ற சார்பானது $f(x) = x^2 + x + 1$ மேல் சார்பு எனில், $B$-ஐ காண்க.

17 252525 மற்றும் 363636 என்ற எண்களின் மீ.பொ.வ காண்க.

18 $p^2 - 3p + 2,\ p^2 - 4$ ஆகியவற்றின் மீ.சி.ம காண்க.

19 $\begin{pmatrix} x+y+z \\ x+z \\ y+z \end{pmatrix} = \begin{pmatrix} 9 \\ 5 \\ 7 \end{pmatrix}$ என்ற அணி சமன்பாட்டிலிருந்து $x$, $y$ மற்றும் $z$ –யின் மதிப்பைக் காண்க.

20 வடிவொத்த முக்கோணங்கள் $ABC$ மற்றும் $PQR$-ன் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். $PQ = 10$ செ.மீ எனில், $AB$ -ஐக் காண்க.

21 சீவாஸ் தேற்றம் - எழுதுக.

22 $(5,-3)$ மற்றும் $(7,-4)$ என்ற இரு புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க.

23 $3x - 7y = 12$ என்ற நேர்க்கோட்டிற்கு இணையாகவும் $(6,4)$ என்ற புள்ளிவழிச் செல்லுவதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.



www.Padasalai.Net

24 ஒரு கோபுரம் தரைக்குச் செங்குத்தாக உள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதியிலிருந்து தரையில் $48$ மீ, தொலைவில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $30^\circ$ எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க.

25 ஓர் உருளை வடிவப் பீப்பாயின் உயரம் $20$ செ.மீ மற்றும் அடிப்புற ஆரம் $14$ செ.மீ எனில், அதன் மொத்தப் புறப்பரப்பைக் காண்க.

26 களிமண் கொண்டு செய்யப்பட்ட $24$ செ.மீ உயரமுள்ள ஒரு கூம்பை ஒரு குழந்தை அதே ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றுகிறது எனில் உருளையின் உயரம் காண்க.

27 ஒரு தரவின் சராசரி மற்றும் மாறுபாட்டுக் கெழு முறையே $15$ மற்றும் $48$ எனில் அதன் திட்ட விலக்கத்தைக் காண்க.

28 $3+1+\frac{1}{3}+\ldots\infty$ என்ற தொடரின் கூடுதல் காண்க.

## பகுதி - II / PART - II

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10x2=20**

29 $t$ என்ற சார்பானது செல்சியஸில் ($C$) உள்ள வெப்பநிலையையும், பாரன்ஹீட்டில் ($F$) உள்ள வெப்பநிலையையும் இணைக்கும் சார்பாகும். மேலும் அது $t(C)=F$ என வரையறுக்கப்பட்டால், (இங்கு $F=\frac{9}{5}C+32$).

(i) $t(0)$ (ii) $t(28)$ (iii) $t(-10)$

(iv) $t(C)=212$ ஆக இருக்கும்போது $C$ -ன் மதிப்பு

(v) செல்சியஸ் மதிப்பும் பாரன்ஹீட் மதிப்பும் சமமாக இருக்கும்போது வெப்பநிலை ஆகியவற்றைக் கண்டறிக.

30 $f(x)=x^2$, $g(x)=3x$ மற்றும் $h(x)=x-2$ எனில், $(f\circ g)\circ h=f\circ(g\circ h)$ என நிறுவுக.

31 $S_1$, $S_2$ மற்றும் $S_3$ என்பன முறையே ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் முதல் $n$, $2n$ மற்றும் $3n$ உறுப்புகளின் கூடுதல் ஆகும். $S_3=3(S_2-S_1)$ என நிறுவுக.

32 400 + 441 + 484 + . . . + 1600 என்ற தொடரின் கூடுதல் காண்க.

33 $9x^4+12x^3+28x^2+ax+b$ ஆனது ஒரு முழுவர்க்கம் எனில், $a$, $b$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

34 $A=\begin{pmatrix} a & b \\ c & d \end{pmatrix}$, $I=\begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix}$ எனில், $A^2-(a+d)A=(bc-ad)I_2$ என நிறுவுக.

35 பிதாகரஸ் தேற்றம் எழுதி நிரூபிக்க.

36 $(-4,\ -2)$, $(-3,\ k)$, $(3,\ -2)$ மற்றும் $(2,\ 3)$ ஆகிய முனைகளை வரிசையாக கொண்ட நாற்கரத்தின் பரப்பு 28 ச. அலகுகள் எனில், $k$–யின் மதிப்புக் காண்க.

37 $4x+7y-3=0$ மற்றும் $2x-3y+1=0$ ஆகிய நேர்க்கோடுகள் சந்திக்கும் புள்ளி வழியாகவும், ஆய அச்சுகளின் வெட்டுத் துண்டுகள் சமமானதுமான நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

38 $\frac{\cos\theta}{1+\sin\theta}=\frac{1}{a}$ எனில், $\frac{a^2-1}{a^2+1}=\sin\theta$ என்பதை நிரூபிக்கவும்.

39 ஒரு சிறுமி தனது பிறந்த நாளைக் கொண்டாடக் கூம்பு வடிவத் தொப்பிகளை 5720 ச. செ.மீ பரப்புள்ள காகிதத்தாளை பயன்படுத்தித் தயாரிக்கிறாள். 5 செ.மீ ஆரமும், 12 செ.மீ உயரமும் கொண்ட எத்தனை தொப்பிகள் தயாரிக்க முடியும்?

40 ஒரு மருந்து குப்பி, ஓர் உருளையின் இருபுறமும் அரைக் கோளம் இணைந்த வடிவில் உள்ளது. குப்பியின் மொத்த நீளம் 12 மி.மீ மற்றும் விட்டம் 3 மி.மீ எனில், அதில் அடைக்கப்படும் மருந்தின் கனஅளவைக் காண்க?

41 ஒரு பெட்டியில் 3, 5, 7, 9, ... 35, 37 என்ற எண்கள் குறிக்கப்பட்ட சீட்டுகள் உள்ளன. சமவாய்ப்பு முறையில் எடுக்கப்படும் ஒரு சீட்டு ஆனது 7 -ன் மடங்காக அல்லது பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

42 சுருக்குக $\frac{1}{x^2-5x+6}+\frac{1}{x^2-3x+2}-\frac{1}{x^2-8x+15}$

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x8=16**

43 (அ) கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ -க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{4}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{4}>1$)

**அல்லது**

(ஆ) $O$ -வை மையமாகக் கொண்ட 3.6 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மையத்திலிருந்து 7.2 செ.மீ தொலைவிலுள்ள $P$ என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைக.

44 (அ) $xy=24,\ x, y>0$ என்ற வரைபடத்தை வரைக. வரைபடத்தைப் பயன்படுத்தி, (i) $x=3$ எனில் $y$ – ஐக் காண்க மற்றும் (ii) $y=6$ எனில் $x$ – ஐக் காண்க.

**அல்லது**

(ஆ) $y=x^2+x-2$ –ன் வரைபடம் வரைந்து அதன் மூலம் $x^2+x-2=0$ என்ற சமன்பாட்டினைத் தீர்க்கவும்.




S. NAGARAJAN, BT ASST (MATHEMATICS), GHSS - MAILPATTI, VELLORE DT - 635805.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net